புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2025** **11 அக்டோபர் 2025**

## பத்திரிகை செய்தி

காரைக்கால், ஸ்மார்ட் மற்றும் ஒருங்கிணைந்த மீன்பிடித் துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K.கைலாஷ்நாதன் அவர்களின் உரை.

Honorable Prime Minister ji, Union Minister for Fisheries Shri Rajiv Ranjan Singh ji, மரியாதைக்கு உரிய சட்டப்பேரவைத் தலைவர், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், மீனவ சமுதாய தலைவர்கள், கடல் தாயின் பிள்ளைகளான என் அன்பிற்கு உரிய மீனவ சகோதர-சகோதரிகள் அனைவருக்கும்... அன்பான வணக்கம்.

தமிழ்ப் புத்தாண்டை ஒட்டி, ஏப்ரல் மாதம் நான் உங்களை சந்தித்தது இன்றும் என் மனதில் பசுமையாக இருக்கிறது. கடல் பாசி வளர்ப்பு, செயற்கை பாறை மற்றும் கூண்டு மீன் வளர்ப்பு போன்ற திட்டங்களை பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின்கீழ் (PMMSY) தொடங்கினோம். மீனவர்களுக்கான சில உதவித் திட்டங்களையும் செயல் படுத்தினோம். இன்று, நம்முடைய பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் முன்னிலையில் மீண்டும் உங்களை சந்திப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியும் - நெகிழ்ச்சியும் அடைகிறேன்.

நம்முடைய பாரதப் பிரதமர், தொடக்கத்தில் குஜராத்தின் முதலமைச்சராகவும் பிறகு நாட்டின் பிரதமராகவும் அரசு தலைமைப் பொறுப்பேற்று 24 ஆண்டுகள் நிறைவு அடைந்து...

25-வது ஆண்டில் அடியெடுத்து வைத்து இருப்பதை ஒட்டி புதுச்சேரி மக்கள் சார்பாக என்னுடைய வாழ்த்துக்களைத் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். புதுச்சேரியின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள் இன்று. ஏனென்றால், மீனவ சமுதாய மக்களின் வாழ்வை - வாழ்வாதாரத்தை மேம்படுத்த, நம்முடைய பாரதப் பிரதமர் தனது விருப்பமான திட்டங்களில் ஒன்றான பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டத்தின்கீழ் (PRIME MINISTER MATSYA SAMPADA YOJANA-PMMSY) ரூ. 131 கோடி செலவில் ஸ்மார்ட் மற்றும் ஒருங்கு இணைந்த மீன்பிடித் துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கான அடிக்கல்லை, தனது திருக் கரங்களால் நாட்டுகிறார். பாரதப் பிரதமர் சொல்லுவார். “இந்தியாவின் கடற்கரை – நிலப் பரப்பின் முடிவுகள் அல்ல. அது நம்முடைய வளர்ச்சியின் வாசற்படி.”

(இந்த தருணத்தில் ஒரு கருத்தை பதிவு செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன். நான் குஜராத்தில் IAS அதிகாரியாக சுமார் 40 ஆண்டுகள் பணியாற்றினேன். அதில் சுமார் 12 ஆண்டுகள் துறைமுகம் மற்றும் மீன் வளத்துறைகளை கவனித்தேன். பாரதப் பிரதமர் குஜராத்தின் முதலமைச்சராக இருந்தபோது சுமார் 18 ஆண்டுகள் அவருடன் நெருக்கமாக பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அந்த அனுபவத்தில் சொல்கிறேன். எனக்கு தெரிந்த வரையில் நம்முடைய பாரதப் பிரதமரைப் போல மீன் வளத் துறைக்கும் துறைமுகத் துறைக்கும் முக்கியத்துவம் தந்து திட்டங்களை செயல்படுத்தியவர்கள் வேறு யாரும் இல்லை. குஜராத்தில் முதலமைச்சராக இருந்தபோதும் சரி. பாரதப் பிரதமராக ஆனபோதும் சரி. அதனால் இன்று இந்தியாவில் – மீன் வளம், மீனவர்களின் பாதுகாப்பு, அவர்களுடைய நலம், வாழ்க்கைத் தரம் உறுதி செய்யப்பட்டு இருக்கிறது.)

இந்த ஆண்டு பட்ஜெட்டில் மட்டும் மீன் வளத்துறைக்கு, முன் எப்போதும் இல்லாத அளவுக்கு ரூ. 2,704 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. அதில் ரூ. 2,465 கோடி இந்த PMMSY திட்டத்திற்காக பாரதப் பிரதமர் ஒதுக்கீடு செய்து இருக்கிறார். பாரத பிரதமரின் இதுபோன்ற முயற்சியால் இந்தியாவில் மீன்வளத்துறை அபரிதமான வளர்ச்சியை கண்டு இருக்கிறது. இன்று நாம் உலக அளவில் மீன் உற்பத்தியில், மீன் ஏற்றுமதியில் இரண்டாவது பெரிய நாடாக வளர்ந்து இருக்கிறோம்.

உலகின் மொத்த மீன் உற்பத்தியில் சுமார் 8 சதவீதம் இந்தியா உற்பத்தி செய்கிறது. அதாவது சுமார் 185 லட்சம் டன் மீன் உற்பத்தி செய்கிறது. சுமார் 60 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் ஈட்டக் கூடிய அளவுக்கு சுமார் 17 லட்சம் 81 ஆயிரம் மெட்ரிக் டன் மீன் உணவை நாம் ஏற்றுமதி செய்து வருகிறோம். பாரதப் பிரதமர் கொண்டு வந்த PMMSY போன்ற தொலை நோக்கு திட்டங்களால் மட்டுமே இது சாத்தியமானது. உலகின் 3வது மிகப் பெரிய நாடாக இந்தியா வளர்ந்து வரும் நிலையில் மீன் வளத்துறை மிகப் பெரிய பங்காற்றுகிறது என்பதை நான் பெருமையோடு குறிப்பிடுகிறேன். அதற்காக மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்.

இதுநாள் வரை, கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் மட்டுமே இருந்தது. ஆனால் பாரதப் பிரதமரின் முயற்சியால் இன்று மீன்வள உள்ளகட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (FISHERIES INFRASTRUCTURE DEVELOPMENT FUND -FIDF) தொடங்கப்பட்டு இருக்கிறது.

தொலைநோக்கு பார்வை கொண்ட பாரதப் பிரதமரின் வழியில், இந்த PMMSY திட்டத்தை புதுச்சேரியில் சிறப்பாக செயல்படுத்த இந்த அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. அதற்காக முனைப்போடு செயல்படும் முதலமைச்சரின் தலைமையில் ஆன மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளை நான் மனதார பாராட்டுகிறேன். ஏற்கனவே தொடங்கப்பட்ட கடல் பாசித் திட்டம், கூண்டு மீன் வளர்ப்பு திட்டம், மீன் உலர் திட்டம் போன்றவை இப்போது சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த முயற்சிகள் எல்லாம் மீனவ சமுதாயத்தின் வளர்ச்சிக்கு புதிய பாதையை போட்டு தந்து இருக்கிறது. மீனவர் சமுதாய மக்கள் பாதுகாப்பான - நம்பிக்கையான வாழ்க்கை வாழ்வதற்கு ஒரு உத்தரவாதத்தை ஏற்படுத்தி தந்து இருக்கிறது. அதனால், ஒரு நிரந்தரமான பொருளாதார வளர்ச்சி ஏற்பட தொடங்கி இருக்கிறது.

(அன்பான சகோதர-சகோதரிகளே!... நான் எப்போதும் சொல்வது உண்டு. மீன் உற்பத்தி அல்லது மீன் பிடிப்பது என்பது நம்முடைய தொழில் மட்டுமல்ல; அது நம்முடைய பாரம்பரியம் - நம்முடைய பண்பாடு.)

பாரதப் பிரதமரின் ஒப்புதலோடு, புதுச்சேரி- காரைக்காலை நாடடில் உள்ள 34 மீன் வள மேம்பாட்டு மண்டலங்களில் (FISHERIES CLUSTER) ஒன்றாக மத்திய அரசு அறிவித்து இருக்கிறது. அதன் அடுத்த கட்ட நகர்வுதான் ஸ்மார்ட் மற்றும் ஒருங்கிணைந்த மீன்பிடி துறைமுக விரிவாக்கத்திற்கான இன்றைய அடிக்கல் நாட்டு விழா. இதன் முக்கிய நோக்கம் மதிப்பு கூட்டப்பட்ட மீன் வள ஏற்றுமதி. இதனால் காரைக்கால் பெரிய அளவில் பயனடையும். இந்த திட்டம் செயல்பாட்டுக்கு வரும்போது, துறைமுகத்தின் உள்கட்டமைப்பு மேம்படும். பெரிய படகுகள் மற்றும் அதிக படகுகள் நிறுத்த வசதிகள் ஏற்படும். மீன்பிடித் தொழில் உள்ளூர் சந்தையில் இருந்து சர்வதேச சந்தைக்கு நகரும். நாம் பெருமைப்படும் விதமாக

இந்த பகுதியில் பொருளாதார செழுமை ஏற்படும். வேலை வாய்ப்புகள் பெருகும். கடலோர கிராமங்கள் வளர்ச்சி பெறும். குறிப்பாக, மீனவ சமுதாய இளைஞர்களின் எதிர்காலம் வலுவடையும். அதுமட்டும் அல்லாமல் புதிய மீன் வள தொழில்நுட்பம் அறிமுகம் ஆகும், உதாரணமாக, பிடிபட்ட மீன்வளத்தை துறைமுகத்தில் இருந்து கடைவீதிகளுக்கு DRONE மூலம் கொண்டு செல்ல உத்தேச வழித்தடம் ஏற்படுத்தப்படும். இதன் மூலமாக, மீனவர்கள் தங்கள் மீன்களை கொண்டு செல்வதற்கான நேரம், பணம் மிச்சமாகும். இதை நான் உறுதியாக குறிப்பிடுவதற்கு ஒரு காரணம் உண்டு. சமீபத்தில் புதுச்சேரியிலும் காரைக்காலிலும் 14 இடங்களில் செயற்கை பவள பாறைகள் அமைத்தோம். அதில் அதிக அளவு மீன் குஞ்சுகள் பெருகி மீன் வளம் அதிகரித்து இருக்கிறது என்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

கடல் எல்லை தாண்டி மீன்பிடிப்பதாக, மீனவர்கள் சந்திக்கும் சிக்கல்கள் இன்று வரை தொடர் கதையாக இருக்கிறது. கைது செய்யப்படும் மீனவர்களையும் அவர்களுடைய படகுகளையும் விடுவிக்க மத்திய அரசு மூலமாக தொடர் முயற்சிகளை செய்து வருகிறோம். தற்போது கூட 29 மீனவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்களை உடனடியாக விடுவிக்க பாரதப் பிரதமரிடம் கேட்டு இருக்கிறேன். இது சம்பந்தமாக இலங்கை தூதரக அதிகாரிகளோடும் நேரடி தொடர்பில் இருக்கிறேன் என்பதையும் இந்த நேரத்தில் உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

இது போன்ற சிக்கல்களுக்கு ஒரு நிரந்தர தீர்வு காணும் விதமாக புதுச்சேரியில் ஆழ்கடல் மீன்பிடி தொழிலை (DEEP SEA FISHING) நாம் ஊக்கப்படுத்தி வருகிறோம். அதற்காக மானிய கடன்கள் தரப்பட்டு இருக்கிறது. அதுவும், பெண் சக்தியை முன்னேற்றும் விதமாக மீனவர் மகளிர் கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டு மீனவப் பெண்களின் பெயரில் இந்த கடன் உதவி தரப்பட்டு இருக்கிறது. இன்னும் அதிக பயனாளிகளுக்கு அதிக மானியத்துடன் கடனை பெற்றுத் தர மத்திய அரசை நாம் அணுகி இருக்கிறோம்.

அப்படி அந்தமான் பகுதி ஆழ்கடலில் கிடைக்கும் மீன்வளம் மதிப்புக் கூட்டப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும். அதற்கான அடிப்படை வசதிகளை இந்த துறைமுக விரிவாக்க திட்டம் ஏற்படுத்தித் தரும். இப்படி ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தை புதுச்சேரியில் செயல்படுத்த ஒத்துழைப்பு தந்த UNION FISHERIES MINSTER SHRI RAJIV RANJAN SINGH அவர்களுக்கு புதுச்சேரி அரசு சார்பாகவும், மக்கள் சார்பாகவும் குறிப்பாக –சுமார் ஒன்றேகால் லட்சம் மீனவ சமுதாய மக்களின் சார்பாகவும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

PMMSY திட்டத்தின்கீழ் இன்று தொடங்கப்படும் இந்தத் துறைமுக விரிவாக்கத் திட்டம் நம்முடைய மீனவ சகோதர- சகோதரிகளின் வாழ்க்கையில் ஒரு புதிய வெளிச்சத்தை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன். நான் (புதுச்சேரியிலும் காரைக்காலிலும் மீனவர்களை- அவர்களுடைய குடும்பத்தை நேரடியாக அவர்களுடைய வீடுகளுக்கு சென்று சந்தித்து இருக்கிறேன் - பழகி இருக்கிறேன், அவர்களோடு சேர்ந்து சாப்பிட்டு இருக்கிறேன். அப்போது எல்லாம் அவர்களுடைய பாசத்தை, தைரியத்தை, மன உறுதியை, நம்பிக்கையை, மீனவர்கள் என்ற பெருமையை, கடலோடு அவர்களுக்கு உள்ள உறவை நான் கவனித்தேன். மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது.)

புதுச்சேரி போன்ற மாநிலத்தில் PMMSY திட்டம் மிகப் பெரிய சமுதாய, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் என்பது உறுதி. முக்கியமாக, இளைஞர்களுக்கு மீன்பிடி தொழில் பற்றிய பெருமை, கௌரவத்தை தந்து இந்த பாரம்பரியம் தொடர வழி வகுக்கும்.

சுதந்திரம் அடைந்த 100 வது ஆண்டில் வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற இலக்கோடு நாடு பயணித்துக் கொண்டு இருக்கிறது. அந்த பயணத்தில், நாட்டின் முன்னோடி மாநிலமாக புதுச்சேரி வளர்ச்சி பெறும் என்ற உறுதியான நம்பிக்கையோடு

இந்தத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த ஒத்துழைப்பு தந்த மீனவ சமுதாய மக்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். உரக்கச் சொல்லுவோம்...

"SABKA SAATH - SABKA VIKAS

SABKA VISHWAS - SABKA PRAYAS"

அனைவரின் வளர்ச்சி... அனைவருக்குமான வளர்ச்சி...

அனைவரின் முயற்சி ... அனைவருக்குமான நம்பிக்கை...

நன்றி... வணக்கம்... ஜெய் ஹிந்த்...!